தலைப்பு 135 – பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு

------------------------------------------------------------------------------------------------

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1. **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிக்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 சனவரி 22 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் **1.6** ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2. **முனைப்பழியிலுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.3. **நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக எற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடிய உள்ளக கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிபடுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டதிலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டைத் தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்குக் காரணமாகின்றது.
- அமைச்சின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் அல்லாது சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்ததன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனையும் வெளிப்படுத்தல்கள்

உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வியில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலகீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ)நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குகின்றன.

(ஆ) இந்த அறிக்கையின் **1.6.2**, **1.6.4** (ஆ) மற்றும் **1.6.6** ஆம் பந்திகளில் குறிப்பிட்ட அவதானிப்புக்கள் சம்பந்தமாக கடந்த ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6. நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கருத்துரைகள்

### 1.6.1. நிதி செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபாரிசுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| அமைச்சின் கீழுள்ள 20.02.01.04 ஆம் இலக்க குத்தகை வாடகை வருமானத் தலைப்பின் மூலம் சேகரிக்கப்பட்ட வருமானமானது திறைசேரி வருமான பொழிப்பு அறிக்கையின் பிரகாரம் (SA-20) ரூபா 754,243,669 ஆக இருந்தது. எனினும் மீளாய்வாண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்றில் வரியற்ற வருமானமாக அது ரூபா 753,578,967 ஆகக் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 664,702 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளின் குறிப்பு 70 இற்கு இணங்க சேகரிக்கப்பட்ட வருமானம் முழுவதும் வருமானக் கணக்கிற்கு கொண்டுவரப்படுதல் வேண்டும. | திறைசேரி அச்சுப் பிரதிகளின் குறிப்பு 70 இற்கு இணங்க 20.02.01.04 ஆம் இலக்க வருமானக் குறியீட்டில் பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 754,243,669 ஆக இருந்த போதிலும் குத்தகை வாடகையாக ரூபா 753,578,967 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளது. மிகுதியான ரூபா 664,702 பணம் உப குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய 20 சதவீத பணமாகும். அதற்கிணங்க எதிர்காலத்தில் மேற்கூறிய வருமானத் தலைப்பின் வருமானம் முழுவதனையும் கணக்குகளில் உள்ளடக்குவதற்கு குறித்துக் கொண்டுள்ளேன். |

## 1.6.2. நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபாரிசுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்குகள் தொடர்பான கூற்றுக்கு (ஏசீஏ4) இரண்டு வைப்புக் கணக்குகளின் அமைச்சு ஏடுகளின் பிரகாரம் மீதி ரூபா 250,468 ஆக இருந்த போதிலும் திறைசேரி கணக்குகளின் பிரகாரம் அந்த மீதி ரூபா 229,968 ஆக இருந்ததன் காரணமாக ரூபா 20,500 தொகையான இனங்காணப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | நி.பி 427 இன் பிரகாரம் அமைச்சு ஏடுகள் திறைசேரி ஏடுகளுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டு வித்தியாசத்தை இனங்கண்டு சரிசெய்தல் வேண்டும். | இது 2016 ஆம் ஆண்டில் காணப்பட்ட பொது வைப்புக் கணக்கினை புதிய 4 கணக்குகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அமைச்சு கணக்கேடுகளிலும் CIGAS நிகழ்ச்சித் திட்டங்களிலும் ஆரம்ப மீதியைப் பதிவுசெய்யும் போது ஏற்பட்ட தவறாகும். பொது வைப்புக் கணக்கில் காணப்பட வேண்டிய ஒரு மீதியை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைத்தமை இந்த வித்தியாசத்திற்கு காரணமாக இருந்தது. அந்த மீதியை மீண்டும் அரசாங்கத்தின் வருமானத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்குத் தேவையான சிபாரிசுகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |

## 1.6.3. காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபாரிசுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 2,083,340,050 ஆக இருந்த போதிலும் அதற்கு கட்டண மிகை அறவிடப்படும் தண்டப்பணமும் மற்றும் உத்தரவு பத்திரக் கட்டணமும் சேர்த்துக் கொள்ளப்பட்டு செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 2,836,919,017 ஆக | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கைக்கு இணங்க கட்டணங்கள், மிகை அறவீடுகள், தண்டப்பணங்கள் என்பன செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலுக்கு உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். | அமைச்சின் தோட்டக் கம்பனிகளின் மூலம் சேகரிக்கப்படுகின்ற குத்தகை வாடகை வருமானம் அதன் கீழ் காட்டப்பட்டுள்ளதுடன் நேரடியாக திறைசேரிக்கு வைப்புச் செய்யப்படுகின்ற பணத்தை எதிர்காலத்தில் காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படாதிருப்பதற்கு குறித்துக் கொண்டுள்ளேன். |

| | | | |
|---|---|---|---|
| | அதாவது ரூபா 753,578,967 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் ரூபா 2,038,159,212 ஆக இருந்த போதிலும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 3,676,192,927 ஆகக் காட்டபட்டிருந்தது. அதற்கிணங்க செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் ரூபா 1,638,033,715 அதிகரித்து பதியப்பட்டிருந்தது. இதற்காக அமைச்சின் கீழே உள்ள நியதிச் சட்ட சபைகள் மற்றும் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டுச் செலவுகளும் உள்ளடக்கப்பட்டிருந்தமை காரணம் என்பது அவதானிக்கப்பட்டது. | அமைச்சின் கீழுள்ள நியதிச் சட்ட சபைகள் மற்றும் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டுச் செலவுகளானது அமைச்சின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ச் செலவு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சலுக்காக இனங்காணப்படாதிருத்தல் வேண்டும். | அரசாங்க கணக்குகள் திணைக்களத்திடமிருந்து விளக்கமளித்தல் பெற்றுக் கொள்ளப்பட்டு எதிர்காலத்தில் காசுப்பாய்ச்சல் கூற்றில் பெறுமதியை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்களை அறவீடு செய்தல்களின் மொத்தம் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு காட்டப்பட்டிருக்கவில்லை. அத்தொகையானது திறைசேரியின் இறுதி கணனி குறிப்புக்களின் பிரகாரம் ரூபா 11,399,259 என்பது அவதானிக்கப்பட்டது. | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்களை அறவீடு செய்தல் காசுபாய்ச்சுக் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் காட்டப்படுதல் வேண்டும். | காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் கணக்கின் முழு அறவீடுகளின் மொத்தத்தை காட்டுவதற்கு குறித்துக் கொண்டுள்ளேன். |
| (ஈ) | முதலீட்டுச் செயற்பாடுகளுக்காகச் செலவு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் ரூபா 23,965,127 ஆக இருந்த போதிலும் அமைச்சின் கீழிலுள்ள நிறுவனங்களின் மூலம் மூலதனச் செலவு விடயங்களுக்காக செலவு செய்யப்பட்ட செலவுகளுடன் ரூபா 3,394,811,098 ஆகக் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க முதலீட்டுச் செயற்பாடுகளுக்காகச் செலவு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் ரூபா 3,370,845,971 ஆல் அதிகரித்து பதியப்பட்டிருந்தது. | முதலீட்டுச் செயற்பாட்டுக்காக செலவு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சலுக்காக அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் மூலம் செலவு செய்யப்பட்ட மூலதனச் செலவுகள் உள்ளடக்கப்படாதிருத்தல் வேண்டும். | அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் மூலம் முதலீட்டுச் செயற்பாடுகளுக்காக செலவு செய்யப்பட்ட காசுப்பாய்ச்சலில் பதியப்பட்டுள்ளதனால் அதற்கிணங்க அதன் செலவு அதிகரித்துக்காட்டப்பட்டிருந்ததுடன் அச்செலவு காசுப்பாய்ச்சல் கூற்றில் மாற்றங்களின் கீழ் உள்ளடக்குவதற்கு குறித்துக்கொண்டுள்ளேன். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் வைப்புப் பெறுவனவு ரூபா 12,887,672 ஆக இருந்த போதிலும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்காததனால் காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் அத்தொகையால் குறித்துக் காட்டப்பட்டிருந்தது. | வைப்பு பெறுவனவுகளானது காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் காட்டப்படுதல் வேண்டும். | நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் பொது வைப்பு பெறுவனவுகள் பதியப்பட்டு எதிர்காலத்தில் சரிசெய்து கொள்வதற்கு குறைத்துக் கொள்கின்றேன். |

## 1.6.4. முற்பணக் கணக்கு மீதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபாரிசுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் திறைசேரி ஏடுகளுக்கும் அமைச்சின் ஏடுகளுக்குமிடையே காணப்பட்ட ரூபா 56,769 வித்தியாசத்தை இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நி.பி 427 இன் பிரகாரம் அமைச்சின் ஏடுகளை திறைசேரி ஏடுகளுடன் கணக்கிணக்கம் செய்து வித்தியாசத்தை இனங்கண்டு சரிசெய்தல் வேண்டும். | ரூபா 56,769 தொகையான இக்கடன் மீதியானது சனாதிபதி செயலகத்திலிருந்து எங்கள் அமைச்சிற்கு இடமாற்றம் பெற்று வருகை தந்த விமல் அபே வர்தன அவர்களுக்குரியதாகும். அந்த உத்தியோகத்தர் 1996 யூலை மாதம் இராணுவத் திணைக்களத்திற்கு இடமாற்றம் பெற்று சென்றிருந்ததுடன் அத்திணைக்களத்திடமிருந்து 1997 செப்தெம்பர் 01 ஆம் திகதி ரூபா 73,465 பெறுமதியான ஒரு காசோலை எங்கள் அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது என பழைய கோவைகளைப் பரீட்சித்த போது வெளிப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

**1.6.5. கட்டுநிதி மீதி**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபாரிசுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| கட்டுநிதி கணக்கின் (ஏசீஏ3) பிரகாரம் கட்டுநிதி பெறுவனவுகள் மற்றும் தீர்த்துவைத்தல்கள் ஆகிய இரண்டிலும் திறைசேரி அச்சுப்பிரதிகளிலுள்ள பெறுமதியை விட ரூபா 35,354,381 வீதம் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது. | கட்டுநிதிக் கணக்கின் கட்டுநிதி பெறுவனவுகளும் தீர்த்துவைத்தல்களும் திறைசேரி அச்சுப்பிரதிகளிலுள்ள பெறுமதிகளுடன் இணங்கியிருத்தல் வேண்டும். | ஆண்டின் நிதிக் கூற்றுகளுக்கான பெறுமதிகளானது குறுக்குப்பதிவுகளின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதனால் கட்டுநிதிக் கணக்கின் பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் அதிகரித்துப் பதியப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் காசாகப் பெற்றவைகள் மற்றும் கொடுப்பனவு செய்யப்பட்டவைகளுக்கு இணங்க கட்டுநிதிக் கணக்கிற்குரிய பெறுமதிகளைச் சமர்ப்பிப்பதற்கு குறித்துக்கொண்டுள்ளேன். |

**1.6.6. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபாரிசுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| நி.பி 891(i) இன் பிரகாரம் பிணை வைப்பு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களில் குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணை பதிவேடு பேணப்படுதல் வேண்டும். | பிணை வைப்புச் செய்தல் சம்பந்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதன் பின்னர் பிணை வைத்தல் பதிவேட்டினை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.6.7. சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| **சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | **சிபாரிசுகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
| --- | --- | --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி 1646 | வாகனங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் ஒரு மாதத்திற்குப் பின்னர் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் மாதாந்த பொழிப்பின் மூலப் பிரதியுடன் மாதாந்த ஓட்ட அட்டவணைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்க வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்ணயிக்கப்பட்ட திகதியில் மாதாந்த பொழிப்பின் பிரதியுடன் நாளாந்த ஓட்ட அட்டவணைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நாளாந்த ஓட்ட அட்டவணைகள் பொழிப்பாக்கப்பட்டு இருக்காமையின் காரணமாக இத்தாமதம் ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தாமதமின்றி நிர்ணயிக்கப்பட்டவாறு ஓட்ட அட்டவணைகளைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) **அரசாங்க நிருவாய சுற்றறிக்கை** | | | |
| (i) 1985 மே 10 ஆம் திகதிய 289 ஆம் இலக்க மற்றும் 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 26/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | அரசாங்க வாகனங்களில் அரசாங்க இலச்சினை பொறிக்கப்பட வேண்டிய போதிலும் அரசாங்க இலச்சினை இல்லாத வாகனங்கள் ஓடுவதில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | அரசாங்க வாகனங்களில் அரசாங்க இலச்சினை பொறிக்கப்படுதல் வேண்டும். | அனைத்து வாகனங்களிலும் அரசாங்க இலச்சினையானது வெளியில் தெரியும் வகையில் வைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அரசாங்க இலச்சினையுடனான ஸ்டிக்கரினை ஒட்டுவதற்கான நடவடிக்கைக்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | (ii) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை யின் 3.01 ஆம் பந்தி | ஒவ்வொரு எரிபொருள் பரீட்சிப்பிற்கும் பின்னைய 12 மாத காலப்பகுதிக்குப் பின்னர் அல்லது 25,000 கிலோமீற்றர் தூரம் ஓடியதன் பின்னர் அல்லது இயந்திரம் தொடர்பான பிரதான திருத்தங்களை செய்ததன் பின்னர் ஆகிய விடயங்களுக்கு மத்தியில் முதலில் ஈடுபடுத்தப்படும் சந்தர்ப்பத்திற்குப் பின்னர் மீண்டும் எரிபொருள் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பம் காணப்பட்டது. | சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ளவாறு எரிபொருள் பரீட்சிக்கப்படுதல் வேண்டும். | இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் 04 வாகனங்களின் எரிபொருள் பரீட்சித்தல் இடம்பெற்றுள்ளது. திடீரென ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அந்நடவடிக்கை தடைப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மிகுதியான ஏனைய வாகனங்களின் எரிபொருள் பரீட்சித்தலினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 09(ஊ) ஆம் பகுதி | கைதவிர்ப்புச் செய்வதற்காக இனங்காணப்படுகின்ற வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் அந்த வாகனங்களின் பாதுகாப்பு தொடர்பாக விசேட வேலைத்திட்டம் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டமென இனங்காணப்பட்ட ஐந்து வாகனங்கள் திறந்த வெளியில் பாதுகாப்பற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கைதவிர்ப்பிற்காக இனங்காணப்படுகின்ற வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் அந்த வாகனங்களின் பாதுகாப்பு தொடர்பாக விசேட வேலைத்திட்டம் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். | செத்சிரிபாய இரண்டாம் கட்ட வளவில் அமைச்சின் கௌரவ அமைச்சர்களின் வாகனங்களுக்காக மாத்திரம் கூடாரத்திற்குள் நிறுத்தி வைக்கும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய வாகனங்கள் வளவின் திறந்த வெளியில் கூடாரமின்றி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவ்வாறே அமைச்சிற்கு ஏனைய பாதுகாப்பான வெற்றுக் காணிகள் இல்லாததனால் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ள பெருந்தோட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | முகாமைத்துவ நிறுவனத்தில் இவ்வாகனங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. |
| (ஈ) | திறைசேரி செயலாளரின் 2018 மார்ச் 19 ஆந் திகதிய 01/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாதைத்துவ சுற்றறிக்கையின் 02(அ) ஆம் பந்தி | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் அரசாங்க நிதி சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகள் கடைப்பிடிக்கப்பட்டு ஓட முடியாத நிலையில் காணப்படுகின்ற அனைத்து வாகனங்களும் 2018 யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிற்குச் சொந்தமாக பயன்படுத்த முடியாதது என இனங்காணப்பட்டிருந்த வாகனங்கள் கணகாய்வுத் திகதியான 2020 பெப்ரவரி 13 ஆந் திகதி வரை கைதவிர்ப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளைப் பின்பற்றி ஓட முடியாத நிலையில் காணப்பட்ட வாகனங்கள் கைதவிர்ப்புச் செய்யப்படுதல் வேண்டும். | தற்பொழுது இந்த வாகனங்களை விரைவாக கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

2. நிதி மீளாய்வு

2.1. வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபாரிசுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 1992 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்திற்குச் சொந்தமான மொத்தமாக 249,843 ஹெக்டயர் அளவான காணி 23 பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு 53 ஆண்டுகள் காலத்திற்கு குத்தகை அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நிலுவை வருமானம் தொடர்பான கூற்றின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அக்கம்பனிகளுக்கு மத்தியில் 12 கம்பனிகளிடமிருந்து அரசாங்கத்தினால் அறவிட வேண்டிய ரூபா 780,608,549 தொகையான குத்தகை வருமானம் நிலுவையாகக் காணப்பட்டதுடன் நி.பி 176(2) மற்றும் (3) இன் பிரகாரம் தாமதமின்றி நிலுவையாகக் காணப்பட்ட வருமானத்தை சேகரித்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 175(2) மற்றும் (3) இன் பிரகாரம் வருமானத்தை சேகரிக்கும் உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தவறியுள்ள உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 780,608,549 தொகையான பணம் 12 பெருந்தோட்டக் கம்பனிகளிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்ததுடன் அவற்றில் அதிக அளவான பணம் கிடைக்க வேண்டி இருந்ததானது குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியிடமிருந்தாகும். குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியால் நிருவகிக்கப்படும் காணிகளிலிருந்து பொதுச் செயற்பாடுகளுக்காக காணிகளைச் சுவீகரித்தமையின் காரணமாக அக்கம்பனியின் தேறிய சொத்துக்களின் பெறுமதி குறைவடைந்துள்ளததனால் வருடாந்த குத்தகைப் பணத்தை திருத்தம் செய்யுமாறு அக்கம்பனியால் வேண்டப்பட்டிருந்தது. எனினும் அதற்காக பொதுத் திறைசேரியினால் இணக்கப்பாடு வழங்கியிருக்காததுடன் கம்பனிக்குச் சொந்தமான தற்பொழுது காணப்படுகின்ற தேறிய சொத்துக்களின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு அக்கம்பனியால் திருத்திய குத்தகை செலுத்தப்படுகின்றது. அரசாங்க தொழில் முயற்சிக்காக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் PE/PL/KPL/GEN/2017 ஆம் இலக்க 2018 ஆகஸ்ட் 02 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் இதுவரை செலுத்தப்படாத குத்தகைப் பணத்தை தவறாது செலுத்துமாறு எங்களுக்கான பிரதியுடன் குருணாகல் பெருந்தோட்டக் கம்பனிக்கு எழுத்து மூலம் |

தெரியப்படுத்தப்பட்டது. அவ்வாறே அது தொடர்பாக பொதுத்திறைசேரியின் தலைமைத்துவத்தில் குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியுடன் ஒரு கலந்துரையாடலினை நடாத்துவதற்கு எங்களால் நிதி அமைச்சிற்கு ஒரு வேண்டுகோள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் இது தொடர்பாக ஒரு தீர்மானத்தினை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குத்தகை பெற வேண்டியுள்ள 11 பெருந்தோட்டக் கம்பனிகளில் 8 பெருந்தோட்டக் கம்பனிகளினால் ரூபா 122,812,218 பணம் செலத்தப்பட்டிருந்ததுடன் கொடகல, குருணாகல், மஸ்கெலிய, சிலாபம் ஆகிய பெருந்தோட்டக் கம்பனிகளினால் இதுவரை எதுவித பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

அவ்வாறே நிலுவைக் குத்தகையைச் செலுத்துமாறு உரிய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அப்பணத்தைச் செலுத்தும் வரை உரிய பெருந்தோட்டக் கம்பனிகளின் முகாமைத்துவ திட்ட நடவடிக்கைகளுக்காக அங்கீகாரம் வழங்காமல் இருப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே பெருந்தோட்டக் கம்பனிகள் உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடலினை நடாத்தி உரிய சிக்கலினைத் தீர்த்து வைப்பதற்கு எங்களால் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திடம் வேண்டுதல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இது தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1995 நவம்பர் 27 ஆந் திகதிய குருணாகல் பெருந்தோட்டக் கம்பனியுடன் | உடன்படிக்கைத் திகதியில் காணப்பட்ட தேறிய சொத்துக்களின் | குருணாகல் பெருந்தோட்டக் கம்பனி அரசாங்கத்தின் கீழ் காணப்படுவதனாலும் |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்படுத்திக் கொண்ட 1558 ஆம் இலக்க குத்தகையை திருத்தம் செய்த உடன்படிக்கையின் பிரகாரம் அத்திகதியில் காணப்பட்ட தேறிய சொத்துக்களை கணித்து குத்தகை பணத்தை 53 ஆண்டுகளுக்குள் ஒரு ஆண்டின் போது சமமான நான்கு தவணைப் பணங்களாகச் செலுத்துதல் வேண்டும். எனினும் தேறிய சொத்துக்களின் அடிப்படையில் ஒரு ஆண்டில் செலுத்த வேண்டிய குத்தகைப் பணத்தை விட குறைத்து செலுத்தியதனால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 214,213,729 தொகையான பற்றாக்குறையினை வைத்து அந்த நிபந்தனை மீறப்பட்டிருந்தது. | அளவின் அடிப்படையில் கணித்த குத்தகைப் பணம் 53 ஆண்டுகளுக்குள் ஒரு ஆண்டின் போது சமமான நான்கு தவணைப் பணங்களில் செலுத்தப்படுதல் வேண்டும். | அக்கம்பனியினால் குத்தகை செலுத்துதல் முழுமையாகத் தவறவிடப்படுதல் இடம்பெற்றிருக்காமையினால் அவர்களின் கணிப்பிற்கு இணங்க குறைந்த வாடகை செலுத்தப்படுகின்றது. எனவே எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக எங்களால் நிதி அமைச்சு செயலாளரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. |
| (இ) | கொடகல மற்றும் சிலாபம் பெருந்தோட்டக் கம்பனிகளினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 291 மில்லியன் குத்தகை வருமானம் செலுத்தப்படாதிருந்ததுடன் அதற்காக உடன்படிக்கையின் 5(இ) பந்தியின் பிரகாரம் குத்தகை உடன்படிக்கையை இரத்து செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையான குத்தகை வருமானங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் செலுத்தப்படவில்லையாயின் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியால் 2019/12/31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவைக் குத்தகைப் பணமாகிய ரூபா 77,718,730 தொகையில் 2020 ஆம் ஆண்டின் நவம்பர் மாதம் வரை ரூபா 28,220,561 தொகை செலுத்தப்பட்டது. அவ்வாறே மிகுதியான நிலுவைக் குத்தகைப் பணத்தை செலுத்துமாறு சிலாபம் பெருந்தோட்ட கம்பனிக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டது.<br><br>கொடகல பெருந்தோட்டக் கம்பனியால் இன்றுவரை எதுவித குத்தகைப் பணமும் செலுத்தப்பட்டிருக்காததுடன் ஐந்து ஆண்டுகள் முகாமைத்துவ திட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற மரங்களைத் தறித்தல்களிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து செலத்துமாறும் அக்குத்துகைப் பணத்தை செலுத்தும் வரை எதிர்காலத்தில் மரங்களைத் தறிப்பதற்காக அனுமதி வழங்குவதில்லை எனவும் |

| | | | |
|---|---|---|---|
| | | | தெரிவிக்கப்பட்டது. அவ்வாறே கொடகல பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான மிலலேவ தோட்டத்தின் 329 ஹெக்டயர் காணி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சுவீகரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்குரிய இழப்பீட்டுப் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் நிலுவைக் குத்தகைப் பணத்தை செலுத்துவதாகவும் கம்பனியால் தெரிவிக்கப்பட்டது.<br><br>மேலும் திருத்திய குத்தகை உடன்படிக்கையின் 5C பிரிவில் காணப்படுகின்ற ஏற்பாட்டின் பிரகாரம் குத்தகைப் பணத்தை செலுத்தாமை நிபந்தனையை மீறுதல் சம்பந்தமாக குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்யும் இயலுமை காணப்படுவதனால் குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிட்ட சட்ட ரீதியான ஏற்பாட்டை அமுல்படுத்துமாறு குத்தகைதாரரான மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கு தெரிவிக்கப்பட்டது |
| (ஈ) | 1992 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளை பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கும் போது அக்காணிகளிலிருந்து அறவிட வேண்டிய குத்தகையை கணிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட சூத்திரத்திற்கு இணங்க தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 200 மில்லியனை மிகைத்திருக்க வேண்டும். அதற்கிணங்க அத்திகதியில் உள்ளவாறு அப்பெறுமதியினை விடக் குறைவான ஆகரபத்தன, உடுபுசல்லாவ, எல்கடுவ ஆகிய மூன்று தோட்டக் | தற்பொழுது நிதி ரீதியாக உறுதியானது என சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் அரசாங்கத்தின் காணிகளைப் பயன்படுத்துவதற்காக அரசாங்கத்திற்கு பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்வதற்காக குத்தகை உடன்படிக்கையைத் திருத்தம் செய்வது தொடர்பாக உரிய நிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டும். | இணங்கிக் கொள்ளப்படுகின்றது; 1992 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டுள்ள 23 பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் தொடர்பாக அந்த ஆண்டிலிருந்து 1995 யூன் வரை குத்தகை அறவீடு செய்தல் இடம்பெற்றதானது அப்பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களான மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என்பவற்றினாலாகும். (உரிய குத்தகை உடன்படிக்கைக்கு இணங்க) 1995 ஆம் ஆண்டின் போது அரசாங்க பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுடன் கையொப்பமிட்டுள்ள திருத்திய உடன்படிக்கையின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | கம்பனிகளுக்கு 20,757 ஹெக்டயர் காணிகள் குத்தகையின்றி வழங்கி 26 ஆண்டுகள் காலம் கடந்திருந்தது. தற்பொழுது அவற்றில் இரண்டு கம்பனிகளின் தேறிய சொத்துக்கள் ரூபா 200 மில்லியனை மிகைத்திருந்தும் குத்தகை அறவிடப்படாததனால் அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது செய்யப்பட வேண்டிய முறைமை தொடர்பான ஏற்பாடுகள் குத்தகை உடன்படிக்கைகளில் இல்லாததன் காரணமாக அந்த அரசாங்க காணிகளிலிருந்து குத்தகையை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | | அப்பெருந்தோட்டக் கம்பனிகளில் 1994-12-31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 200 மில்லியனை மிகைத்த கம்பனிகள் மாத்திரம் குத்தகைகளை திருத்தம் செய்திருந்தது. அதற்கிணங்க குத்தகை திருத்தம் செய்யப்பட்ட பெருந்தோட்டக் கம்பனிகளிடமிருந்து குத்தகை அறவீடு செய்தல் குத்தகை உடன்படிக்கைக்கு இணங்க பொதுத் திறைசேரி சார்பாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும் உடபுஸல்லாவ, ஆகரபத்தன, எல்கடுவ ஆகிய பெருந்தோட்டக் கம்பனிகளின் தேறிய சொத்துக்களின் பெறுமதி 2011 ஆம் ஆண்டு வரை ரூபா 200 க்கு மேல் அதிகரித்திருந்தும் குத்தகை தொடர்பான திருத்தங்களைச் செய்யக்கூடியதாவது குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிட்ட நிபந்தனைகளைத் திருத்தம் செய்வதன் பின்னரானதுடன் குத்தகை உடன்படிக்கைகளில் அவ்வாறான திருத்தங்கள் செய்யக்கூடியதாவது உரிய கம்பனியின் இணக்கப்பாட்டுடனாகும். ஒட்டு மொத்தமாக அனைத்துக் கம்பனிகளுடன் கையெழுத்திட்டுள்ள உடன்படிக்கைகளில் குறிப்பிட்ட நிபந்தனைகளில் இடம்பெற வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக இந்த அமைச்சினால் பொதுத் திறைசேரிக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |
| (உ) | 1992 ஆம் ஆண்டின் போது உரிமையுள்ள அரசாங்கத்தின் குத்தகை காணிகளை அடகு வைத்து அப்பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு கடன்பெற்றுக்கொள்ளும் இயலுமையானது உடன்படிக்கைகளின் 3(ஆ) | குத்தகைக் காணிகளைப் பிணையாக வைத்து நீண்ட காலக் கடன்களை வணிக வங்கிகளிலிருந்து பெற்றுக் கொள்ளும் போது அக்கடன் பணத்தைத் தீர்த்து | குத்தகை உடன்படிக்கையின் மூலம் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு ஒப்படைக்கப்பட்டதானது உரிய காணிகளின் குத்தகை உரிமை மாத்திரமாகும். பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளால் தோட்டங்களை அடகு வைத்து கடனைப் பெற்றுக் கொள்ளும் |

| | | |
|---|---|---|
| பந்தியில் வழங்கப்பட்டிருந்ததுடன் பெருந்தோட்டக் கம்பனிகளால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 18 தோட்டக் கம்பனிகள் வணிக வங்கிகளிடமிருந்து ரூபா 8,207,028,962 மொத்த தொகையான நீண்ட காலக் கடன்களைப் பெற்றுக் கொண்டிருந்தன. அக்கடன் பணத்தைத் தீர்த்து வைப்பதற்கு முடியாமையின் அடிப்படையில் அக்காணிகளின் குத்தகை உரிமையானது வணிக வங்கிகளுக்கு ஒப்படைக்கப்படுவதனால் உடன்படிக்கைகளில் காணப்படுகின்ற அவ்வாறான பந்திகளைத் திருத்தம் செய்வது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தி சரிசெய்திருக்கவில்லை. | வைப்பதற்கு அக்கம்பனிகளுக்கு முடியாது போனால் அக்கடன் சம்பந்தமாக அரசாங்கத்திற்கு பொறுப்பு ஒப்படைக்கப்படுவதில் லை எனவும் காணிகளை குத்தகைக்கு வழங்கும் குறிக்கோள் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் நிபந்தனைகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | போது குத்தகை உரிமை மாத்திரம் வங்கிக்கு ஒப்படைக்கப்படுவதுடன் காணிகளின் உரிமை ஒப்படைக்கப்படுவதில்லை. அதற்காக குத்தகை உடன்படிக்கையின் மூலம் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டுள்ளது.<br><br>குத்தகை உடன்படிக்கைகளை திருத்தம் செய்வதாக இருந்தால் குத்தகைக்கு வழங்குபவருக்கும் குத்தகைக்கு பெறுபவருக்குமிடையே இணக்கப்பாட்டினை மேற்கொள்ள வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளதனால் குத்தகை நிபந்தனைகளை மீறியதன் அடிப்படையில் உருவாகியுள்ள குத்தகை உடன்படிக்கைகளை இரத்துச் செய்யும் இயலுமை சம்பந்தமாக சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் 2020 ஒக்டோபர் 22 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அதற்காக ஏற்பாடுகள் உள்ளது என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதனால் அது சம்பந்தமாக தேடிப் பார்த்து நடவடிக்கை எடுப்பதற்கு குத்தகைக்கு வழங்குபவர்களான மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கும் இலங்கை அரசாங்க பெருச்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 1992 ஆம் ஆண்டின் போது 23 பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான மொத்தம் 617,486 ஏக்கர்களான தோட்டங்களிலிருந்து ஒரு ஏக்கருக்கு அறவிடப்படுகின்ற வருடாந்த குத்தகை ரூபா 456 இற்கும் ரூபா 3,067 இற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.<br>தற்பொழுது காணிகளின் வணிகப் பெறுமதியை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளும் போது அறவிடப்படுகின்ற இக்குத்தகையை திருத்தம் செய்வது தொடர்பாக குத்தகைக்கு வழங்குபவர்கள் கவனம் செலத்தவில்லை. | தற்பொழுது காணிகளின் வணிகப் பெறுமதியை கவனத்தில் கொண்டு அறவிடப்படுகின்ற குத்தகையை திருத்தம் செய்வது தொடர்பாக உரிய தரப்பினர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும். | பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளின் குத்தகைக்கு வழங்குனர் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையும் இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமும் ஆவதுடன் இது தொடர்பான கொள்கை ரீதியான தீர்மானமானது பொதுத் திறைசேரியினை உள்ளடக்கிய அரசாங்கத்தின் மேல் மட்டத்தில் பெற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.<br><br>1992 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டுள்ள 23 பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் தொடர்பாக அந்த ஆண்டிலிருந்து 1995 யூன் வரை குத்தகை அறவீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டியது அப்பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கிய காணிகளின் உரிமையாளர்களான மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை அரசாங்க கூட்டுத்தாபனத்தினாலாகும். (உரிய குத்தகை உடன்படிக்கைக்கு இணங்க) 1995 ஆம் அண்டின் போது அரசாங்கம் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளுடன் கையெழுத்திட்டுள்ள திருத்திய குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் அப்பெருந்தோட்டக் கம்பனிகளின் 1994 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 200 மில்லியனை மிகைத்த கம்பனிகளில் மாத்திரம் குத்தகை திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க குத்தகையை திருத்தம் செய்த பெருந்தோட்டக் கம்பனிகளிலிருந்து குத்தகையை அறவீடு செய்தல் குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் பொதுத் திறைசேரிக்காக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்றது.<br>தற்பொழுது காணிகளின் வணிகப் பெறுமதி அதிகரித்திருந்தும் குத்தகை தொடர்பாக திருத்தம் செய்யக்கூடியதாக இருப்பது |

| | | |
|---|---|---|
| | | குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிட்ட நிபந்தனைகளைத் திருத்தம் செய்ததன் பின்னராக இருப்பதுடன் குத்தகை உடன்படிக்கைகளில் அவ்வாறான திருத்தங்கள் செய்யக்கூடியதாக இருப்பது உரிய கம்பனிகளின் இணக்கப்பாட்டுடனாகும். ஒட்டு மொத்தமாக அனைத்து பெருந்தோட்டக் கம்பனிகளுடன் கைச்சாத்திட்டுள்ள குத்தகை உடன்படிக்கைளில் குறிப்பிட்ட நிபந்தனைகளில் இடம்பெற வேண்டிய திருத்தங்கள் தொடர்பாக இந்த அமைச்சினால் பொதுத் திறைசேரிக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்கப்படுகின்ற தீர்மானத்தின் பிரகாரம் பெருந்தோட்ட முகாமைத்துவ மேற்பார்வை பிரிவு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கும். |

## 2.2. செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபாரிசுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் 18 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 21 மில்லியன் மொத்த தொகையான நிதி ஏற்பாட்டில் ரூபா 16 மில்லியன் மொத்த தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | நிறைவேற்றக் கூடிய செயற்பாடுகளின் அளவிற்குச் சமமான வகையில் நிதி ஏற்பாடு வழங்கப்படுதல் வேண்டும். | 18 செலவு விடயங்களில் 16 செலவு விடயங்களானவை கௌரவ அமைச்சினதும் கௌரவ இராஜாங்க அமைச்சரினதும் செலவு விடயங்களின் சேமிப்பாகும். அச்செலவு விடயங்களின் சேமிப்பிற்காக பதவியணியினர்களை நியமித்தல் தாமதமடைதல், கட்டுநிதி கிடைக்காமையின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டின் திசெம்பர் மாத பட்டியல்களுக்காக 2020 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவுகள் மேற்கொள்ளல் என்பன தாக்கமளித்துள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் 18 மூலதன செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 1,014 மில்லியன் மொத்த தொகையான நிதி ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டது ரூபா 468 மில்லியன் மொத்த தொகையாகும். | மூலதன செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துவதற்காக ஆண்டின் ஆரம்பத்திலிருந்து செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திட்டமிடல் பிரிவின் ஒருங்கிணைப்புடன் செயற்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெறுகின்ற 8 செலவு விடயங்களின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற 20 செயற்திட்டங்கள் தொடர்பாக நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தாமைக்கு தாக்கமளித்துள்ள பிரதான காரணமாவது இரண்டு சந்தர்ப்பங்களில் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினால் அங்கீகரித்த நிதி ஏற்பாட்டினைத் திருத்தம் செய்து (குறைத்து) இடம்பெற்ற நடைமுறையும் தொடர்ச்சியாக ஆண்டின் இறுதி வரை கட்டுநிதி கிடைத்தல் ஒழுங்கற்று இருத்தலின் அடிப்படையிலும் முறையாக அமுல்படுத்தப்பட்ட திட்டத்திற்கு இணங்க செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. |
| (இ) | 02 அபிவிருத்தி உப செயற்திட்டங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டினை ஒதுக்கீடு செய்வதன் மூலம் வழங்கப்பட்ட ரூபா 236,966,000 தொகையான நிதி ஏற்பாட்டில் ரூபா 142,717,365 தொகை சேமிக்கப்பட்டிருந்ததனால் அங்கீகரித்த குறைநிரப்பு மதிப்பீடானது நடைமுறைச் சாத்தியமற்றது என்பது அவதானிக்கப்பட்டது. | குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாட்டினை வேண்டிக்கொள்வதற்கு முன்னர் அமைச்சிற்கு அந்த நிதி ஏற்பாடு அத்தியாவசியமானதா என்பது தீர்மானிக்கப்படுதல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் மத்திய பகுதியில் தகமைப் பெற்ற மேலதிக நிதி ஏற்பாடானதுடன் சனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டதுடன் செயற்திட்ட செயற்பாடுகள் கைவிடப்பட்டுள்ளதனால் சேமிப்பு இடம்பெற்றுள்ளது.<br><br>135-2-3-39-2202 சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் விளைதிறனை மேம்படுத்துவதற்கு உதவி வழங்குவதற்காக அமுல்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட செயற்திட்ட பிரேரணைக்காக இரண்டு கட்டங்களின் கீழ் |

| | | | |
|---|---|---|---|
| | | | நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. தொடக்கத்தில் வழங்கிய ரூபா 150 மில்லியன் தொகையான நிதி ஏற்பாட்டிற்காக ஆரம்பக் கட்டளை வழங்கப்பட்டிருந்ததுடன் தேர்தல்கள் அறிவிக்கப்பட்டதன் காரணமாக இப்பெறுகையின் இறுதி கட்டங்களை அமுல்படுத்தாமையும் கட்டுநிதி போதாமையின் காரணமாக பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்களுக்காக முழுமையாக கொடுப்பனவுகள் இடம்பெறாமையும் நிதி ஏற்பாடு சேமிப்பிற்கு காரணமாகும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் 04 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 3,727,500 தொகையான நிதி ஏற்பாட்டில் ரூபா 1,557,159 சேமிப்பாகக் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. | குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாட்டினை வேண்டுவதற்கு முன்னர் அமைச்சிற்கு அந்த நிதி ஏற்பாடு அத்தியாவசியமானதா என்பதனைத் தீர்மானித்தல் வேண்டும். | 135-1-0-1409 மற்றும் 135-1-11-1201 ஆகிய செலவு விடயங்களுக்காக கட்டுநிதி முறையாக கிடைக்காமையின் அடிப்படையில் 2020 ஆம் அண்டின் போது கொடுப்பனவு செய்ய வேண்டி இருந்தது. உரிய கொடுப்பனவுகள் பொறுப்புக்களின் கீழ் குறிப்பு (iii) இல் காட்டப்பட்டுள்ளன.<br><br>135-1-11-1202 ஆம் செலவு விடயத்திற்காக இரண்டு இராஜாங்க அமைச்சர்களுக்கும் பதவியணியினர்களுக்கும் செலுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட அளவில் மேலதிக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டதுடன் அச்செலவுகளானது எதிர்ப்பார்க்கப்பட்ட அளவில் இடம்பெற்றிருக்காமையின் அடிப்படையில் சேமிப்பு உருவாகியிருந்தது.<br><br>135-1-2-1505 ஆம் செலவு விடயத்திற்காக செலுத்த |

| | | |
|---|---|---|
| | | வேண்டி ஏற்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்ட டொலர் பெறுமதியின் அடிப்படையில் மேலதிக நிதி ஏற்பாடு வேண்டப்பட்டிருந்ததுடன் டொலர் பெறுமதியின் மாற்றத்தின் அடிப்படையில் நிதி ஏற்பாடு சேமிப்பாக இருந்தது. |

**2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபாரிசுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 597,030 மொத்த தொகையான கடன் மீதி 04 ஆண்டுகளுக்கும் 30 ஆண்டுகளுக்குமிடைப்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டதுடன் அவை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | 2004 ஒக்டோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தீர்த்துவைக்கப்பட வேண்டும். | இணங்குகின்றேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1. வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்களானது தேயிலை மற்றும் இறப்பர் தோட்ட புனர்வாழ்வு செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபாரிசுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 8 மாவட்டங்களில் செயற்திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காகவும் செயற்திட்டத்தின் தலைமை அலுவலகத்திற்காகவும் பயன்படுத்துவதற்கு செயற்திட்டத்தினால் 2018 செப்தெம்பர் 04 ஆந் திகதி | செயற்திட்டத்தின் கீழுள்ள சொத்துக்கள் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டும். | அந்த வாகனத்தை செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக வரிசை அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டடுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | 10 டபிள் கெப் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. அவற்றில் நுவரெலியா மாவட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட டபிள் கெப் வாகனம் பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சிற்கு 2019 பெப்ரவரி 21 ஆந் திகதி ஒப்படைக்கும் பெறுபேறாக செயற்திட்டத்தினால் நுவரெலியா மாவட்டத்தினுள் பயன்படுத்துவதற்காக ஒரு வாகனம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,126,870 தொகை வாகன வாடகைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | செயற்திட்டங்களின் திட்டங்களைப் பூரணப்படுத்தும் அறிக்கைக்கு இணங்க 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது தெரிவுசெய்யப்பட்ட 06 மாவட்டங்களில் காணப்படுகின்ற தேயிலைப் பயிர்களை பிடுங்கி அகற்றுவதன் மூலம் 5500 ஹெக்டயர் காணிகளை தயார்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வறாயினும் 2016 ஆம் ஆண்டின் போது இக்காணிகளில் எந்த வேலையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2017 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை 1452 ஹெக்டயர் காணி மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 2019 ஆம் ஆண்டின் போது மீண்டும் பயிரிடும் இலக்கு 4500 ஹெக்டயர் வரை திருத்தம் செய்வதற்கு செயற்திட்டத்தினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட காலப்பகுதிக்குள் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். | 2019 யூன் மாத விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச அமைப்பின் மத்திய கால மீளாய்வினை அடிப்படையாகக் கொண்டு தேயிலை மீள் பயிரிடலின் முழுமையான இலக்கு 4500 ஹெக்டயர் வரை குறைக்கப்பட்டிருந்தது. தொடக்க திட்ட மீளாய்வின் போது உருவாகிய திட்டமிடல் தவறுகளின் காரணமாக செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு குறிப்பிடத்தக்க அளவான தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் தொழிநுட்ப சேவைகளை வழங்குபவர்களிடமிருந்து (சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை) பெற்றுக்கொள்ளப்பட்ட பலவீனமான தொழிநுட்ப உதவி முதலியன. |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறே திட்டமிட்டவாறு செயற்திட்டத்தை அமுல்படுத்தும் போது குறிப்பிடத்தக்க அளவான தாமதம் அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | சிறிய தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் நிபந்தனைகளுக்கு இணங்க காணிகளை துப்பரவாக்குவதற்காக முற்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குள் தேயிலை மீள்பயிரிடல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் 2017 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட முற்கொடுப்பனவுகள் ரூபா 138 மில்லியனுக்குரிய 1037 ஹெக்டயர் காணியில் 2019 ஆம் ஆண்டின் போது 610 ஹெக்டயர் அல்லது 58 சதவீதம் மாத்திரம் பயிரிடப்பட்டிருந்தன. | செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முற்கொடுப்பனவுகளில் அதிக பகுதியானது இடம்பெற்றிருந்ததானது 2017 ஆம் ஆண்டின் இறுதி அரைப்பகுதியிலாகும். அதற்கிணங்க அதிக அளவானவை ஆரம்பிக்கப்பட்டிருந்தன. 2018 மே இலிருந்து யூன் வரையான காலப்பகுதியிலாகும். அதனால் 2019 ஆம் ஆண்டின் போது 610 ஹெக்டயர் அளவிலேயே பயிர்ச் செய்கை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது. |
| (ஈ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது 06 மாவட்டங்களில் 729.77 ஹெக்டயர்களில் தேயிலைப் பயிர்ச் செய்கை செய்வதற்காக 3,331 நலன்பெறுனர்களுக்கு தொடக்க நிவாரணமாக ரூபா 109,263,440 மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தும் காணிகளை அளவை செய்வதில் தாமதம், எல்லைகள் அமைப்பதில் தாமதம், விவசாயிகள் நிவாரண முறைமையிலிருந்து விலகுதல், தேயிலைப் பயிர்ச் செய்கை வழிகாட்டிகளைப் பின்பற்றாமை ஆகிய காரணங்களால் மிகுதியான நிவாரணக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டிருந்தன. | வெளிக்கள உத்தியோகத்தர்களின் செயற்திறனை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விவசாயிகள் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். இல்லையாயின் முற்கொடுப்பனவுகளை மீள அறவீடு செய்தல் வேண்டும். | இணங்குகிறேன். வெளியிடப்பட்டுள்ளது; அனைத்து முற்கொடுப்பனவுகளைப் பெற்றவர்களும் (மீண்டும் கொடுப்பனவுகள் செய்யப்பட்டவர்களைத் தவிர்த்து) முடியுமான அளவு விரைவாக மீண்டும் பயிர்ச் செய்கை நடைமுறைக்குள் உட்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | வருடாந்த வேலைத்திட்டம் மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் சேவை வழங்கும் நடைமுறையினை மேம்படுத்தல், தமது தொழில் முயற்சி நடவடிக்கைகளை மேம்படுத்துதல் சிறந்த பயன்பாட்டில் ஈடுபடுவதற்கு ஊக்குவித்தல் முதலிய விடயங்களுக்காக ஒரு தேயிலை சங்கத்திற்கு ரூபா 220,000 வீதம் ஆன கருவிகள் தொகுதியையும் உபகரணங்களையும் பகிர்ந்தளிப்பதற்கு உரிய செயற்திட்டத்தினால் 200 தேயிலைச் சங்கங்களில் 110 தேயிலைச் சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் 2019 பெப்ரவரி மாதத்தின் போது பெறுகை நடைமுறைகள் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் அது மிளாய்வாண்டின் இறுதி வரை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை . அதற்கிணங்க தேயிலைச் சங்கங்களை ஊக்குவிப்பதில் பௌதீக செயல்முன்னேற்றங்களை அடைந்து கொள்வதற்கு செயற்திட்டத்திற்கு முடியாதிருந்தது. | திட்டமிட்ட நடவடிக்கைகளை தாமதமின்றி திட்டமிட்ட காலப்பகுதிக்குள் அமுல்படுத்துதல் வேண்டும். | நிர்ணயிக்கப்பட்டவாறு 2019 நவம்பர் மாதத்தின் போது பெறுகை நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2020 பெப்ரவரி மாதம் அளவில் அது பூரணப்படுத்தப்பட்டிருந்தன. 2020 மார்ச் மாதம் அளவில் கருவிகளும் உபகரணங்களும் தெரிவுசெய்யப்பட்ட சங்கங்களுக்குப் பகிர்ந்தளித்தலை முடிவுறுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும், Covid 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக திட்டமிட்டவாறு பெறுகை நடைமுறைகளை முடிவுறுத்துவதற்கு முடியாதிருந்தது. |
| (ஊ) | செயற்திட்டத்தின் திட்டங்களை பூரணப்படுத்தும் அறிக்கையின் பிரகாரம் 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது தெரிவுசெய்யப்பட்ட 02 மாவட்டங்களில் 3000 ஹெக்டயர் அளவான காணியில் இறப்பர் பயிர்ச்செய்கை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் புதிய பயிர்களுக்காக பயிர்ச்செய்கை செய்யும் அனுமதிப் பத்திரம் 2575 | செயற்திட்ட காலப்பகுதிக்குள் திட்டமிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். | 2020 பெரும் போகத்தின் போது மிகுதி இலக்குகளை அடைந்துகொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் செயற்திட்டத்தினால் தற்பொழுது திட்டமிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | ஹெக்டயர் அளவான காணிக்காக மாத்திரம் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தால் வழங்கப்பட்டிருந்ததுடன் இத்திட்டத்திலிருந்து விவசாயிகள், ஏனைய பயிர்களை பயிரிடுவதற்காக ஈடுபடுதல் ஆகிய காரணங்களால் 2,094 ஹெக்டயர் அளவான காணி மாத்திரம் 2019 திசெம்பர் மாதம் வரை பயிரிடப்பட்டிருந்தன. அதற்கிணங்க திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டத்தினால் அதன் இலக்குகள் முழுமையாக அடைந்துகொள்ளப்படவில்லை. | | |
| (எ) | 2019 செப்தெம்பர் 15 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் 15 திகதி வரையான காலத்தில் செயற்திட்டத்தினால் அம்பாரை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் முறையே 1,014 ஹெக்டயர் மற்றும் 780 ஹெக்டயர் அளவான காணியில் இறப்பர் நாற்றுக்கள் நடுகை பண்ணுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. 2019 செப்தெம்பர் மாதத்திலிருந்து 925,704 இறப்பர் நாற்றுக்களை உரிய காணிக்கு எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் ஒரு மாத தாமதத்தின் பின்னர் 612,725 இறப்பர் நாற்றுக்கள் மாத்திரம் எடுத்துச் செல்லப்பட்டிருந்தன. இதன் பெறுபேறாக எதிர்ப்பார்த்த இலக்கில் 34 சதவீதத்தினையேனும் பூரணப்படுத்துவதற்கு செயற்திட்டத்திற்கு முடியாதிருந்தது. | பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பத்துடன் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அனைத்து நடவடிக்கைகளையும் ஆயத்தப்படுத்துதல் வேண்டும். | இம்மாவட்டங்களில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்கின்ற சமயத்தில் அதிக மழைவீழ்ச்சி கிடைத்ததுடன் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு அதிகளவு தாக்கம் ஏற்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது திட்டமிட்டவாறு முழுமையான இலக்குகளையும் அடைந்துகொள்வதற்கு முடியாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | செயற்திட்டத்தினால் 2019 ஆம் ஆண்டின் பெரும் போகத்தின் போது மொனராகலை மாட்டத்தில் 572.4 ஹெக்டயர் அளவான காணியில் இறப்பர் பயிர்ச்செய்கை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் விவசாயிகளுக்கு 886,075 கிலோ கிராம் கொம்போஸ்ட் பசளைகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அனைத்து செயற்திட்ட நடவடிக்கைகளையும் அமுல்படுத்துதல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் பெரும் போகத்தின் போது இடம்பெற்ற அதிக மழையின் காரணமாக காணிகளுக்கு பசளைகளை பகிர்ந்தளித்தல் தொடர்பாக அதிக தாக்கம் ஏற்பட்டிருந்தது. |
| | (i) நாற்றுக்களைப் பகிர்ந்தளித்தல் 2019 ஒக்டோபர் 12 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2019 திசெம்பர் 15 ஆந் திகதி முடிவுறுத்தப்பட்டிருந்தும் நாற்றுக்களைப் பகிர்ந்தளிக்கும் காலப்பகுதிக்குள் எந்த வகையிலும் பசளை பகிர்ந்தளித்தல் இடம்பெற்றிருக்கவில்லை. அதற்கிணங்க நாற்றுக்களை நடுகை செய்யும் போது மண்ணுடன் பசளைகளை கலவை செய்ய முடியாதிருந்தது. | | |
| | (ii) 572.4 ஹெக்டயர் அளவான காணிக்காக கொம்போஸ்ட் பசளையின் தேவைப்பாடு 886,075 கிலோ கிராம்களாகும். எவ்வாறாயினும் 747,475 கிலோ கிராம் கொம்போஸ்ட் பசளைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 46,200 | நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் விவசாயிகளுக்கு பசளைகளை வழங்குதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | மழைவீழ்ச்சி முடிவடைந்ததுடன் கொம்போஸ்ட் பசளைகளை வழங்குவதற்காக மீண்டும் ஒரு திகதியை நிர்ணயித்து விவசாயிகளுக்கு வழங்குதல் மேற்கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | நாற்றுக்கள் அல்லது 89.5 ஹெக்டயர் அளவான காணிக்காக மிகுதியான 138,600 கிலோ கிராம் பசளைகளை வழங்குவதற்கு முடியாதிருந்தது என்று அவதானிக்கப்பட்டது. | | |
| (ஐ) | செயற்திட்டத்தின் திட்டங்களை பூரணப்படுத்தும் அறிக்கையின் பிரகாரம் தேயிலைக் கொழுந்துகளைப் பிடுங்குதல் மற்றும் இறப்பர் பால் வெட்டுதல் காலப்பகுதி வரை இழக்கப்படுகின்ற வருமானத்தை உள்ளடக்கிக் கொள்வதற்கு விவசாயிகளுக்கு வணிக வங்கிகளினூடாக சுய தொழிலில் ஈடுபடுவதற்காக அல்லது குறுங்கால வருமானங்களை, உழைக்கும் வழிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு கடன் வசதிகளை வழங்குவதற்காக ரூபா 422.6 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கடன் வசதிகளை வழங்குதல் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வேலைத்திட்டம் மற்றும் பாதீட்டின் பிரகாரம் விவசாயிகளுக்கு ரூபா 20 மில்லியன் கடன் வசதிகளை வழங்குவதற்கு செயற்திட்டத்தினால் திட்டமிடப்பட்டிருந்தும் அது 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை தாமதமின்றி திட்டமிடப்பட்ட காலப்பகுதிக்குள் அமுல்படுத்த வேண்டும். | செயற்திட்டத்தின் தொடக்க உறுப்புரையான இந்நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்தல் தாமதமாக இடம்பெற்றது. |
| (ஒ) | ஒரு ஆண்டிற்கு 250,000 இறப்பர் நாற்றுக்கள் வீதம் வழங்கக்கூடிய இயலுமையினைக் கொண்ட | தேவையான இறப்பர் நாற்றுக்களை உற்பத்தி செய்வதனைப் பூர்த்தி செய்வதற்காக | இதன் அனைத்து பெறுகை நடவடிக்கைகளும் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினால் |

| | | | |
|---|---|---|---|
| | இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான அம்பாறை மாவட்டத்திலுள்ள பதியதலாவையில் அமைந்துள்ள நாற்று மேடையினை மேம்படுத்துவதற்கு செயற்திட்டத்தினால் 2018 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ரூபா 42 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. இதன் மூலம் பயிர்களுக்காக ஒரு குளம், நீர்ப்பாசன முறைமை, மாதிரி வீட்டுத்தோட்டம், ஒட்டு நாற்று மேடை, வீதி முறைமை என்பவற்றை 2018 திசெம்பர் மாதமளவில் நிர்மாணித்து முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் அது ஒரு ஆண்டிற்கு மேல் தாமதமடைந்திருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டில் எதிர்ப்பார்த்த இயலளவினை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. | நிர்மாண வேலைகளை விரைவுபடுத்துதல் வேண்டும். | மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனம் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் இன்று வரை இவ்வாறான நிர்மாணம் மாத்திரம் மிகுதியாக உள்ளதுடன் அதன் பூர்த்தியாக்கல் செயல் முன்னேற்றம் 70 சதவீதமாகும். |
| (ஓ) | 2019 திசெம்பர் மாதத்தின் போது இறப்பர் நாற்றுக்களைக் கொள்வனவு செய்வதற்கும் போக்குவரத்துச் செய்வதற்கும் ரூபா 2,015,806 தொகை செயற்திட்டத்தின் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படாது கொடுப்பனவு செய்யப்பட்டதனால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் மிகுதிப் பண மீதி அப்பெறுமதியால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான மொத்தச் செலவுகளும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவுகளும் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். | ஆண்டின் இறுதியில் வேலைப்பழு அதிகரித்ததன் காரணமாக ஏற்பட்ட எழுத்து வேலைத் தவறினால் இந்த விடயம் உருவாகியிருந்தது. இத்தவறு தற்பொழுது சரிசெய்யப்பட்டுள்ளது. |

## 3.2 முகாமைத்துவ பலகீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| ணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபாரிசுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) **அரசாங்கத்தின் காணிகளை அனுமதியின்றி கைப்பற்றல்** | | |
| குத்தகை உடன்படிக்கையின் மூலம் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட காணிகளை குத்தகைக்குப் பெற்றவர் பாதுகாப்பதாக வாக்குறுதியளித்திருந்த போதிலும் 16 பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு குத்தகை அடிப்படையில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த காணிகளில் 795.96 ஏக்கர் காணிகளும் அத்தோட்டங்களின் 172 உத்தியோகபூர்வ இல்லங்களும் அனுமதியற்ற நபர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன என அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறான அத்துமீறிக் குடியிருப்பவர்கள் வருடாந்தம் அதிகரித்து வருவதனால் அக்காணிகளின் பாதுகாப்பும் அவற்றினை எதிர்ப்பார்த்த குறிக்கோளுக்காக ஈடுபடுத்துவதும் தொடர்பாக குத்தகைக்கு வழங்கியவர்களினால் மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ மேற்பார்வை பிரிவினால் கவனம் செலுத்துதல் போதியளவில் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. | 1979 இன் 7 ஆம் இலக்க அரசாங்க காணிகள் (உரிமையை மீளப்பெற்றுக்கொள்ளல்) அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அத்துமீறிய குடியிருப்பாளர்களுக்கு தொடக்கத்தில் இரண்டு வார அறிவித்தலின் மூலம் உரிய காணிகளிலிருந்து நீங்குமாறு அறிவித்தல் வழங்கப்பட்டதுடன் இரண்டாவதாக அவ்வாறு நீங்கிக்கொள்ளாதுவிடின் அப்புறப்படுத்தும் அறிவித்தல் வழங்கப்படும். அப்புறப்படுத்தும் அறிவித்தலின் மூலம் நீங்கிக்கொள்ளாதுவிடின் வழக்கு தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எவ்வாறாயினும் அத்துமீறிய குடியிருப்பாளர்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் போது பெருந்தோட்ட முகாமைத்துவ மேற்பார்வை பிரிவிற்கு பல்வேறு செல்வாக்குகள் காணப்படுவதுடன் இவ்வாறான செல்வாக்குகளின் காரணமாக அத்துமீறிய குடியிருப்பாளர்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கை தாமதமடைந்துள்ளது. சில மாவட்டங்களில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்களின் |

| | | |
|---|---|---|
| | | தீர்ப்புக்களைப் பெற்றிருந்தமையும் தாமதத்திற்கு காரணமாக இருந்தது. |

(ஆ) **வாகனப் பயன்பாடு**

---------------------------

| | | |
|---|---|---|
| (i) அதிக எரிபொருள் பாவனையினால் ரூபா 14,500,000 மொத்த கிரயமான இரண்டு மோட்டார் வாகனங்கள் 2019 திசெம்பர் மாதத்திலிருந்து ஓடாது காணப்பட்டதுடன் வாகனங்களைக் கொள்வனவு செய்யும் போது பராமரிப்புக் கிரயம் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பது இதற்கிணங்க அவதானிக்கப்பட்டது. | வாகனங்களைக் கொள்வனவு செய்யும் போது பராமரிப்புக் கிரயம் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் தற்பொழுது காணப்படுகின்ற அவ்வாறான வாகனங்கள் சம்பந்தமாக பொதுத் திறைசேரியின் ஆலோசனையைப் பெற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஒரு வாகனம் 2013 சோகம் மகாநாட்டிற்காக கொண்டுவரப்பட்டிருந்த வாகனம் என்பதுடன் அவ்வாகனம் மகாநாட்டின் பின்னர் அமைச்சரின் உத்தயோகபூர்வ வாகனமாக இணைத்துக்கொள்வதற்கு வழங்கப்பட்டிருந்தது.<br><br>கடமை வசதிகளை முன்னிட்டு ஜீப் வண்டியினைப் பயன்படுத்துவதன் காரணமாக குறைந்த எரிபொருள் செயற்திறன் மற்றும் பராமரிப்பு சிக்கல் உள்ள மோட்டார் காரினை மேற்கூறிய செயற்பாட்டிலிருந்து நீக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. மேலும் இந்த வாகனம் சொகுசு வாகனம் என்பதனால் குழாம் கடமைச் செயற்பாட்டிற்காக ஈடுபடுத்துவதும் சிக்கலானதாகும். எனவே உத்தியோகபூர்வ வாகனங்களை அவசர பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைளுக்காக அனுப்பிவைக்கும் சந்தர்ப்பங்களில் கௌரவ அமைச்சர்களை உள்ளடக்கி வாகனத்திற்கு தகமையுள்ள உத்தியோகத்தர்களுக்கு இந்த வாகனம் தற்காலிகமாக வழங்கப்படுவதுடன் |

தற்பொழுது இலங்கை அரசாங்க பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் தலைவரின் உத்தியோகபூர்வ வாகனமாக தற்காலிகமாக வழங்குமாறு மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின்படி அந்நடவடிக்கைக்காக வழங்கப்பட்டுள்ளது.

மற்றைய மோட்டார் வாகனம் 2010 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட வாகனம் என்பதுடன் இவ்வாகனம் காணப்பட்ட தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி கௌரவ அமைச்சர் பயன்படுத்திய வாகனமாகும். கௌரவ அமைச்சருக்கு புதிதாக ஜீப் வண்டியை பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் ஏனைய செயற்பாடுகளுக்காக இந்த வாகனம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் செயற்திறன் குறைவடைந்ததன் காரணமாக குழாம் செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தல் சிக்கலான இந்த வாகனத்தை அடிக்கடி பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் கொழும்பு மற்றும் அண்மித்த நகர எல்லைக்குள் ஓடும் போது அதிக எரிபொருள் நுகர்வு இடம்பெறுவதனால் அந்த உத்தியோகத்தர்கள் இந்த வாகனத்தை நீண்ட காலத்திற்குப் பெற்றுக்கொள்வதனைத் தவிர்த்துக்கொண்டுள்ளார்கள்.

தற்பொழுது மேலதிக

| | | | |
|---|---|---|---|
| | | | செயலாளர் (அபிவிருத்தி) உத்தியோகபூர்வ வாகனத்தை திருத்தம் செய்வதற்காக அனுப்பிவைத்துள்ளதனால் அவருக்கு தற்காலிகமாக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளது. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சும், 03 இராஜாங்க அமைச்சுக்களும் இந்த அமைச்சிற்குச் சொந்தமான வளங்களைப் பயன்படுத்துவதுடன் அதற்கிணங்க 04 கௌரவ அமைச்சர்கள், 04 செயலாளர்கள் மற்றும் ஏனைய பதவிநிலை உத்தயோகத்தர்களையும் உள்ளடக்கி உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகமையுள்ள உத்தியோகத்தர்களுக்கு வாகனங்களை வழங்கும் போது இந்த வாகனத்தை விளைதிறனாகப் பயன்படுத்த முடியுமென தயவாகத் தெரிவிக்கின்றேன். |
| (ii) | 2007 ஆம் ஆண்டில் தயாரித்த பஜிரோ வகையான மோட்டார் வாகனம், மின்சார சுற்றுவட்டம் மற்றும் சென்ஸர் குறைபாடு காரணமாக அதன் இயந்திரத்தை உயிர்ப்பிக்க முடியாததனால் அது 2019 சனவரி 28 ஆந் திகதியின் பின்னர் ஓடாதுள்ளதுடன் திருத்தம் செய்து ஓடுவதற்கு ஈடுபடுத்துவது தொடர்பாகவும் | திருத்தம் செய்து ஓடுவதற்கு ஈடுபடுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். | இந்த மோட்டார் வாகனமானது வெளிக்கள கடமைகளுக்கு ஈடுபடுத்துவது சிக்கலானதால் உத்தியோகபூர்வ வாகனமாக வழங்கும் போது உத்தியோகத்தர்களால் மறுக்கப்பட்டுள்ளன. எனவே கைதவிர்ப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தினால் இந்த வாகனத்தை திருத்தம் செய்து சிறிய தூரங்களுக்கு ஓடுவதற்கு ஈடுபடுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட வேண்டுதலினை கவனித்துப் |

| | | | |
|---|---|---|---|
| | கவனம் செலுத்தப்பட்டிருக் கவில்லை. | | பார்த்து அதற்கிணங்க அந்த வாகனத்தை தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்திற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | வெளிகம தென்னை ஓலை வெளுருதல் மற்றும் கருகுதல் நோயைத் தடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் 11 ஆண்டுகள் காலமாக காலி, மாத்தறை, ஹம்மாந்தோட்டை ஆகிய 03 மாவட்டங்களுக்காக அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக தென்னை அபிவிருத்தி அதிகார சபை, தென்னை ஆராய்ச்சி சபை மற்றும் மாத்தறை மாவட்ட செயலகம் என்பவற்றினால் செலவு செய்த பணம் ரூபா 556.43 மில்லியனாகும். மேலும் நோய் தொற்றியுள்ளதனால் அப்புறப்படுத்தப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 315,974 ஆக இருந்தது. அப்புறப்படுத்தப்பட்ட மரங்களின் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாகக் குறைவடைந்திருந்தும் மீளாய்வாண்டிலிருந்து அது மீண்டும் அதிகரித்திருந்ததனால் நோயைக் கட்டுப்படுத்துதல் வெற்றியளிக்கும் மட்டத்தில் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. | வெளிகம தென்னை ஓலை வெளுருதல் மற்றும் கருகுதல் நோய் மீளாய்வாண்டிலிருந்து மீண்டும் அதிகரிப்பதனால் அதற்கு தாக்கமளிக்கும் காரணத்தை தேடிப்பார்த்து பரிகாரம் காணுதல் வேண்டும். | நோயுள்ள மரமாக இனங்காணப்பட்ட மரங்களின் அளவு 2015 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்தும் 2018 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் படிப்படியாக அதிகரித்து வந்திருந்தது. துறையில் நோயைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் மற்றும் தென்னை பயிர்ச்செய்கை சபையின் உத்தியோகத்தர்களுடன் கடந்த காலப்பகுதியில் இது சம்பந்தமாக நீண்ட கலந்துரையாடல் செய்யப்பட்டதுடன் அதன் போது பின்வரும் விடயங்கள் காரணம் என்பது வலியுத்தப்பட்டது.<br><br>(i) காணி உரிமையாளர்களால் அப்புறப்படுத்தப்படாத நோயுற்ற மரங்கள் தென்னை பயிர்ச்செய்கை சபை மற்றும் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டு அழிக்கப்படுவதுடன் தடுப்பு மருந்து ஏற்றப்படுகையில் இழப்பீடு கிடைக்காததனால் நோயுற்ற |

மரங்களை வெட்டி அப்புறப்படுத்தாமல் இருப்பதற்கு காணி உரிமையாளர்கள் விருப்பமாக இருக்கின்றனர் எனினும் மரங்களுக்குத் தடுப்பு மருந்து ஏற்றுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற க்ளிபொசைட் களை கொல்லி தடைசெய்யப்பட்டதுடன் காணி உரிமையாளர்கள் ஆர்வம் காட்டினால் மாத்திரம் மரங்களை அகற்றுதல் இடம்பெறும். காணி உரிமையாளர்கள் மரங்களை அகற்றும் தாமதத்தன்மையின் பிரகாரம் நோயற்ற மரங்களுக்கு நோய் பரவுதல் அதிகரித்திருந்தது.

(ii) 2018 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை அப்புறப்படுத்தப்பட்ட மரங்களுக்காக இழப்பீடு செலுத்துவதற்கு திறைசேரியிடமிருந்து கட்டுநிதி கிடைத்தலானது முறையற்றுள்ளது. காணி உரிமையாளர்கள் எவருக்கும் இழப்பீடு செலுத்துதல் தாமதமடைகையில் ஏனைய காணி உரிமையாளர்களும் நோயுற்ற மரங்களை அகற்றுவதில் தாமதம் காட்டுகின்றனர். அதுவும் நோயற்ற

| | | | |
|---|---|---|---|
| | | | மரங்களுக்கு நோய் பரவி நோயுள்ள மரங்கள் அதிகரிப்பதற்கு காரணமாகும்.<br><br>(iii) இந்த நோயின் தன்மைக்கு இணங்க நோய் காணப்படுகின்ற ஒரு மரத்தின் விதையின் நோய் எதிர்ப்புக் காலம் 8 மாதங்களுக்கும் 24 மாதங்களுக்கும் இடைப்பட்டதாகும். நோயை வெளியில் வெளிப்படுத்தாது ஒரே தடவையில் இக்காலப்பகுதியின் போது அதிக அளவான மரங்களுக்கு நோய் வெளியே வெளிப்படுத்துதல் இடம்பெற்றுள்ளது. |
| (ஈ) | அமைச்சின் ஒரு செயற்திட்டமான கப்ருக நிதியத்திற்காக அந்த நிதியம் தோற்றுவிக்கப்பட்ட 2005 இன் 31 ஆம் இலக்க ‘‘கப்ருக நிதிய அதிகாரச்சட்டத்தின்’’ 21 ஆம் பந்தியின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்டவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். | இந்த அமைச்சின் கீழுள்ள கப்ருக நிதியத்தின் நிதிக்கூற்றுக்களை அடுத்துவரும் ஆண்டின் போது தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பிக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

**4.** **நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபாரிசுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் 2015 – 2030 காலப்பகுதியில் அடைந்துகொள்ளப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களையும் இலக்குகளையும் இனங்கண்டு அவற்றினை அமுல்படுத்துவதற்கு 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் கட்டுப்பட்டு காணப்படுகின்றது. அதற்கிணங்க அசைச்சிற்குரிய இணைத்துக்கொள்ளப்பட்ட நிறுவனங்களின் நோக்கெல்லையின் பிரகாரம் உரிய இலக்குகள் இனங்காணப்பட்டு திட்டங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தும் அமைச்சின் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக இனங்காணப்பட்ட குறிக்கோள்கள், இலக்குகள், குறிகாட்டிகள் என்பன செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக இனங்காணப்பட்ட குறிக்கோள்கள், இலக்குகள், குறிகாட்டிகள் என்பன செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். | நிலைபேறான அபிவிருத்திச் சபையின் வழிகாட்டலின் குறிக்கோள்கள், இலக்குகள், குறிகாட்டிகள் என்பன இனங்காணப்பட்டுள்ளன. |

5. **மனித வளங்கள் முகாமைத்துவம்**

-----------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சிபாரிசுகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** |
|---|---|---|
| ------------------------- | ---------------- | ----------------------------------------------- |
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் சிரேஸ்ட மட்டத்தைச் சேர்ந்த உதவிப் பணிப்பாளர், உதவிச் செயலாளர், இரண்டு கணக்காளர் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர் ஆகிய பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. | சிரேஸ்ட மட்டத்தைச் சார்ந்த பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படுதல் அமைச்சின் செயலாற்றலுக்கு தாக்கத்தை ஏற்படுத்துவதனால் அந்த வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அமைச்சு மட்டத்தில் இப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான இயலுமை காணப்படவில்லை. அரசாங்க நிருவாக அமைச்சிற்கு பல சந்தர்ப்பங்களில் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டின் போது மேற்கூறிய அனைத்து வெற்றிடங்களும் நிரப்பப்பட்டுள்ளதுடன் தற்பொழுது அமைச்சின் பதவிகளின் அளவு மாற்றமடைந்துள்ளது. |